கோரிக்கைகளைக் கவனத்தில் எடுத்து மே மாதத்திற்கு மாத்திரம் பயிலுநர் கொடுப்பனவுகளை வழங்குவதற்காக நிதி ஏற்பாடுகளை வழங்கும் சாத்தியம் காணப்படுகின்றது.

IV. மேற்குறித்த ஆட்சேர்ப்புகான முறையான நேர்முகப் பரீட்சைகள் பிரதேச செயலாளர்களாலேயே நடாத்தப்பட்டன. அது தொடர்பில் நீண்ட அறிவுறுத்தல் தொகுதியொன்று என்னால் வழங்கப்பட்டுள்ளன. அந்த அறிவுறுத்தல்களுக்கு இணங்க பெரும்பாலும் நேர்முகப் பரீட்சைகள் நடாத்தப்பட்டிருந்த போதிலும், சில காரணங்களினால் (விண்ணப்பதாரர்கள் உண்மையான தகவல்களைச் சமர்ப்பிக்காமை, சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களில் குறைபாடுகள் காணப்படுகின்றமை போன்றவற்றின் காரணமாக) அடிப்படைத் தகைமைகள் காணப்படாது பயிற்சி பெறும் ஒரு தொகைப் பயிலுநர்கள் உள்ளனர். அவர்கள் பெரும்பாலும் அடையாளம் காணப்பட்டு பயிற்சியை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. எவ்வாறாயினும், பல்வேறு காரணங்களினால் அத்தகைய பயிலுநர்கள் தொடர்ந்தும் பயிலுநர்கள் அடிப்படையில் கொடுப்பனவுகளைப் பெற்று பயிற்சியில் இருப்பதையும், சிலபோது நிரந்தர நியமனம் பெறுவதையும் அனுமதிக்க முடியாது. அதற்கிணங்க, அத்தகைய பயிலுநர்களை அல்லது நிரந்தர நியமனங்கள் வழங்கப்பட்டிருப்பின் அத்தகைய உத்தியோகத்தர்களை, அந்தப் பயிற்சி நியமனக் கடிதங்களை/ நிரந்தர நியமனக் கடிதங்களை இரத்துச் செய்வதற்காக என்னிடம் அனுப்புவதற்கு உரிய நிறுவனத் தலைர்கள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். இது தொடர்பான ஏற்பாடுகள் இந்த ஆட்சேர்ப்புடன் தொடர்புடையதாக என்னால் வழங்கப்பட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர் நியமனக் கடிதத்தின் 22 ஆம் பந்தியிலும், அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரினால் வழங்கப்பட்ட பயிற்சி நியமனக் கடிதத்தின் 08 ஆம் பந்தியிலும் உள்ளடக்கப்பட்டுள்ளன என்பதைக் கவனத்தில் கொள்ளவும்.

- இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படாத முதல் பட்டங்களைப் பெற்ற விண்ணப்பதாரர்களுக்கு நியமனம் வழங்குவதற்கான ஏற்பாடுகள் காணப்படவில்லை. அதனால், என்னால் 2020.08.24 ஆம் திகதி வழங்கப்பட் நேர்முகப் பரீட்சை அறிவுறுத்தல்களுக்கு இணங்க வெளிநாட்டுப் பட்டங்கள், நியமனங்களுககு ஏற்புடையதாகாது.

- மேலும், 2020.09.15 ஆம் திகதியில் வேலையற்றவர்களாக இருந்திராத பட்டதாரிகளுக்கு நியமனங்கள் வழங்குவதற்கும் ஏற்பாடுகள் காணப்படவில்லை என்பதை இதன் போது கவனத்திற்கொள்ளுதல் வேண்டும்.

03. மேற்படி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மாகாண சபைகளுக்கான/ மாகாணப் பாடசாலைகளுக்கான அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிகளை வழங்கும் செயன்முறைகள் தொடர்பான நடவடிக்கைகளை இந்த மாதத்தில் செய்து முடிப்பதற்கு மாகாண சபைகள் நடவடிக்கை எடுப்பது பொருத்தமானதாகும்.

ஒப்பம்./ ஜே.ஜே. ரத்னசிரி
செயலாளர்
பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு